2008 ஏப்ரல் 22]

அதனுடைய முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லி, மண் புழு உரம் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு, பிற இயற்கை உரங்களைத் தயாரிப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காகக் கோடிக்கணக்கான ரூபாயை அரசு செலவு செய்து வருகிறது.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 135, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.*

135—

தொழிற்பிரிவுகள்

***25811—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூரத் நகரின் சரிகை தயாரிக்கும் தொழில்நுட்பத்தைப் பின்பற்றி வடிவமைக்கும் தொழிற்பிரிவுகளை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சூரத் நகர சரிகை தயாரிக்கும் தொழில்நுட்பத்தைப் பின்பற்றி வடிவமைக்கும் புதிய தொழிற்சாலைகளை நிறுவும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, பொதுவாக தென்னகத்தைப் பொறுத்தவரையிலே, பட்டுப் புடவைக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் அதிகமாக இருக்கின்றது. தனியார் நிறுவனங்களோடு போட்டி போட்டுக்கொண்டு இப்பொழுது நம்முடைய கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இலாபம் ஈட்டி வருவதாக

அறிகின்றேன். அதற்காக என்னுடைய பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே வேளையில், பட்டுச் சேலை உற்பத்திக்குத் தேவையான சரிகைப் பொருள்களை நம்முடைய தமிழகத்திலேயே தயார் செய்கின்ற செயற்குறிப்பு அரசிடம் வரவேண்டுமென்று நான் வேண்டுகின்றேன். ஏனென்று சொன்னால், முழுக்க முழுக்க சூரத் நகரையே நம்பியிருக்கக்கூடிய நிலைமை இப்போது இருக்கிறது. சூரத் நகரத்திலே ஏதாவது ஒது பாதிப்பு ஏற்பட்டால், இங்கே இருக்கின்ற பட்டுச் சேலையினுடைய விலை உயருகிறது. உதாரணமாகச் சொல்லப் போனால், சென்ற முறை 'பிளேக்' நோய் வந்தபோது, சூரத் நகரத்திலே பட்டு சரிகை உற்பத்தி நின்று போன நிலையிலே, நம்முடைய தமிழகத்திலே பட்டுச் சேலையினுடைய விலையேற்றம் அதிகமாகக் காணப்பட்டது. அதை நிவர்த்தி செய்வதற்காக, காஞ்சிபுரம், குடந்தை மற்றும் ஆரணி போன்ற நகரங்களிலே சரிகை உற்பத்தி செய்வதற்கான திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்துமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இதற்கு முந்தைய பதிலின்போது புதிய தொழிற்சாலைகள் அமைக்கிற எண்ணம்தான் அரசிடம் இல்லையென்று சொன்னேனேயொழிய, செய்துகொண்டிருக்கிற சரிகை நிறுவனங்களை அல்ல. அவற்றில், சூரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித்தான் சரிகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, நடைமுறையிலே வருகிற சில பிரச்சினைகளைப்பற்றி. அது உண்மையாக இருந்தாலும், நமக்குத் தேவையான சரிகையிலே ஒரு 48 சதவீதத்தை நம்முடைய தமிழகத்திலேயே, நம்முடைய சரிகை நிறுவனத்திலேயே உற்பத்தி செய்து, ஓரளவிற்குப் பிரச்சினை வராத அளவிற்குப் பாதுகாப்பை நெசவாளர்களுக்கு உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும், வருங்காலங்களிலே இதற்கும், இன்னும் தொழில்நுட்பத்தைப் புகுத்துகிற நிலைக்கும், புதிய சரிகை நிறுவனங்களைத் தொடங்குகிற நிலைக்கும் சாத்தியக்கூறுகள் என்ன என்பதைத் துறையின்மூலமாகவும் யோசித்துப் பார்த்து இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

2008 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திலேயும், கும்பகோணத்திலேயும் ஏற்கெனவே 4 table-கள், 2 table-கள் என்று போடப்பட்டு, அங்கே ஒரு 4,000 மேக் என்று சொல்லப்படுகிற அளவிலே சரிகை உற்பத்தி செய்வது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும்கூட, ஆரணியிலே புதிதாக ஒரு உற்பத்திக் கூடம் ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருந்து, அது கைவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆரணியிலே அந்த உற்பத்திக் கூடம் நிறுவப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். அதேபோல, Half-Fine சரிகை என்று சொல்லப்படுகின்ற போலி சரிகைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் செயற்குறிப்பு ஏதாவது வைத்திருக்கிறதா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆரணி பகுதியிலே சரிகை நிறுவனம் ஒன்று கண்டிப்பாகத் தேவை என்கிற நிலை இருக்கிறது. அதனுடைய சாத்தியக்கூறுகளை அரசு, இந்தத் துறை ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். Half-Fine சரிகை என்பது, போலியான சரிகை அல்ல. உண்மையான சரிகையைப் போடுகிறபோது ரூ.25,000 வருகிற அந்தப் புடவை, இன்றைய சூழ்நிலையிலே வியாபார நோக்கத்திற்காக 5,000 ரூபாயிலே நம்முடைய பொது மக்கள், அது தேவை என்று உணர்கிற நிலையின் காரணமாக, அதையும் தனியாரும், நாமும் உபயோகப்படுத்துகிறோம். ஏமாற்றுகிறபொழுது அதற்குரிய பாதுகாப்பைத் துறையின்மூலமாகக் கொடுப்பதற்காகத் தற்பொழுது காஞ்சிபுரம், கோயம்புத்தூர் பகுதிகளிலே அந்த இயந்திரம் அங்கே வெளியிலே வைக்கப்பட்டு, ஒரு புடவைக்கு இவ்வளவு என்று அந்த இடத்திலேயே வாடிக்கையாளர்கள் அதனுடைய தரத்தைத் தெரிந்துகொள்கிற நிலையையும், இந்தத் துறை உருவாக்கியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மதுரையிலேகூட, அடுத்த

மாதத்திலே இதுபோன்ற ஓர் இயந்திரத்தை அங்கே இந்தத் துறை வைக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

136—

பராமரிப்பு நிதி

***23194—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, திருமலை மன்னர் மகாலைப் பராமரிப்பதற்கு நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். திருமலை நாயக்கர் அரண்மனையின் பராமரிப்புப் பணிகள் 11-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்பேரில் ரூ.1.00 கோடி செலவில் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. 12-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்பேரில் ரூ.3.00 கோடி செலவில் முழுமையான சீரமைப்புப் பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ள அரசு நிருவாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும், 2006-2007 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் வருடாந்திர பராமரிப்புப் பணிகளின் அடிப்படையில் வெளிப்புறத்தில் அமைந்துள்ள செடி, கொடிகளை அகற்றுவதற்கு ரூ.7,600/-க்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

முற்பகல் 10-05

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி